பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 03 2025      12 40
திங்கட்கிழமை      பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்பட்ட அமளி காரணமாக அவை நடவடிக்கைகள் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.
- தில்லி உயர்நீதிமன்ற நீதிபதியின் இல்லத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் குறித்து விவாதிக்க திரு ஜெ பி நட்டா, திரு மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோருக்கு மாநிலங்களவைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அழைப்பு விடுத்துள்ளார்.
- காசநோயை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் புற்று நோயை கண்டறிவதற்கான முழு பரிசோதனை விரைவில் தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்பட்ட அமளி காரணமாக அவை நடவடிக்கைகள் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்றுகாலை கூடியதும் கர்நாடக மாநில துணை முதலமைச்சர் திரு டி கே சிவக்குமார் கர்நாடகாவில் மேற்கொள்ளப்பட உள்ள பொதுத்துறை பணிகளுக்கான ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர்.

இத்தகைய கோரிக்கை அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் இடஒதுக்கீட்டுக் கொள்கையின் மாண்பை குறைப்பாக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

இதன் காரணமாக கர்நாடக துணை முதலமைச்சர் தமது பதவியை ராஜிநாமா செய்ய வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

இதே விவகாரம் குறித்து பேசிய அவை முன்னவர் திரு ஜெ பி நட்டா, காங்கிரஸ் கட்சி அரசியல் சாசன சட்டத்தை குறைத்து மதிப்பிடுவதாகக் குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, எந்த ஒரு நபரும் இடஒதுக்கீடு கொள்கையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று கூறினார்.

இதையடுத்து அவையில் ஏற்பட்ட கடும் அமளி காரணமாக அவை நடவடிக்கைகள் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அறிவித்தார்.

மக்களவை இன்று காலை கூடியதும், இதே விவகாரம் குறித்து பிஜேபி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

சமாஜ்வாதி கட்சி உறுப்பினர்கள் உத்திரபிரதேசத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த விவாதிக்கப்பட வேண்டுமென்று பதாகைகளை ஏந்தி அமளியில் ஈடுபட்டனர்.

அவை நடவடிக்கையின்போது இத்தகைய பதாகைகளுடன் கோஷம் எழுப்புவது கண்டனத்துக்குரியது என்று மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறினார்.

இதையடுத்து அவையில் எழுந்த அமளி காரணமாக மக்களவை பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதியின் இல்லத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ரொக்கப் பணம் குறித்து விவாதிப்பதற்காக மாநிலங்களவை தலைவர் திரு ஜக்தீப் தன்கர், அவை முன்னவர் திரு ஜெ பி நட்டா எதிர்க்கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே ஆகியோக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மாநிலங்களவையில் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ஜெய்ராம் ரமேஷ், இந்த விவகாரம் தொடர்பாக கடந்த வாரம் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து, திரு ஜக்தீப் தன்கர் இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

[]<<<>>>[]

உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காசநோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஆண்டு தோறும் மார்ச் 24-ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த தினத்தையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா விடுத்துள்ள செய்தியில், காசநோயை முற்றிலும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறியுள்ளார்.

இதற்கென 100 நாள் பிரச்சார இயக்கம் நாடு முழுவதும் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

காசநோயிலிருந்து விடுபடும் வகையில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் வகையில் மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை 500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருவதை திரு ஜெ பி நட்டா தமது சமூக வலைதளப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வரும் அனைத்து சுகாதார பணியாளர்களுக்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலும் காசநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய அம்மாவட்ட காசநோய் பிரிவு துணை இயக்குநர் திரு முத்துப் பாண்டியன் காசநோய் குணப்படுத்தக்கூடியது என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - முத்துப்பாண்டி ) ---- 49 செகண்ட்*

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற காசநோய் விழிப்புணர்வு பேரணியில் 300 மேற்பட்ட மருத்தவக் கல்லூரி மாணவ மாணவியர்கள் விழிப்புணர்வு பதாகையுடன் கலந்து கொண்டனர்.

திருப்பூரில் அம்மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு நடைபயண பேரணியில் ஏராளமான செவிலியர்கள் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காசநோய் குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மற்றும் பேரணியை ஆட்சியர் திரு தினேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று சத்திஷ்கர் மாநில சட்டப்பேரவையின் வெள்ளிவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்றார்.

அம்மாநில சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

இந்த கூட்டத்தில் அம்மாநில ஆளுநர் திரு ராமன்தேகா, பேரவைத் தலைவர் டாக்டர் ராமன்சிங், முதலமைச்சர் திரு விஷ்ணு தேவ்சாய், எதிர்க்கட்சித் தலைவர் திரு சரண்தாஸ் மகந்த் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

பின்னர் ஒடிஸா செல்லும் குடியரசுத்தலைவர், நயகர் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீநிலமதாபா ஆலயத்துக்கு சென்று வழிபாடு செய்கிறார்.

அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொள்கிறார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் புற்று நோயை கண்டறிவதற்கான முழு பரிசோதனை இன்னும் பத்து நாட்களில் தொடங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், கருப்பை-வாய் புற்று நோய்க்கான எச் பி வி தடுப்பூசி போடுவதற்காக 37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக் கூறினார்.

[]<<<>>>[]

தில்லி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தொடரில் 2025-26-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் நாளை தாக்கல் செய்யப்படுகிறது.

பட்ஜெட் மீதான விவாதம் நாளை மறுநாள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தின் வனப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சரபரா பகுதியிலும், ராஷ்ட்ரீய ரைபில் மற்றும் சிறப்புப் படையினருடன் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

கைப்பற்றப்பட்ட வெடிப்பொருட்கள், வெடிபொருள் தடுப்பு நிபுணர்களால் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லப்பட்டு அழிக்கப்பட்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையின் வித்யவிஹார் மேற்குப் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் இன்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தில் ஏராளமான வீட்டு உபயோகப் பொருட்கள் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீயணைப்பு வீரர்கள் மூன்று மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி உறுதியுடன் உள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ரஸ்டம் **Umerov** தெரிவித்துள்ளார்.

சௌதி அரேபிய தலைநகா ரியாத்தில் நடைபெற்ற அமெரிக்க பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று அவர் கூறியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான முக்கிய அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**